இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (5.8.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சிறப்பாக கொண்டாடும் வகையில் அமைக்கப்பட்ட" கலைஞர் கலைஞர் குழுவின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இணைத் தலைவர் –மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், உறுப்பினர் செயலர் முதலமைச்சரின் செயலாளர்3 முனைவர் ம.சு.சண்முகம், குழு உறுப்பினர்கள் திரைப்பட நடிகர் நாசர், திருமதி விஜயா தாயன்பன், கவிஞர் பா. விஜய், தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ரா. முரளி, தமிழ் ஸ்டுடியோ நிறுவனர் அருண்மோ ஆகியோர் உள்ளனர்.

தலைமைச் செயலகத்தில் உள்ள பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தில், மேம்பாட்டு பணிகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.08.2023) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.

"நான் முதல்வன்" திட்டத்தின் கீழ்

ஐ.ஏ.எஸ். தேர்வு எழுதும் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.7,500 ஊக்கத் தொகை!

தமிழ்நாடு அரசு அறிவிப்பு

சென்னை, ஆக.7-

கல்லூரி மாணவர்களின் தொழில் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் "நான் முதல்வன்" திட்டம், போட்டித் தேர்வு மாணவர்களுக்கு உதவும் வகையில் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒரு முன்னெடுப்பைத் செய்துள்ளது.

குடிமைப்பணி தேர்வுகளுக்குத் தயாராகும் தமிழ்நாட்டு மாணவர்களுக்கு உதவும் நோக்கில், 2023-24-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீட்டுத் தேர்வின் வாயிலாகத் தேர்வு செய்யப்படும் 1,000 மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.7,500 வழங்குவதற்கான சிறப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், முதல்நிலைத் தேர்வில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குத் தயாராவதற்காக ரூ.25,000 ஊக்கத்தொகையும் வழங்கப்படும். போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களை ஊக்கப்படுத்துவதோடு அவர்களது செலவுகளைக் குறைக்கும் நோக்கத்தோடும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

ஐ.ஏ.எஸ். ஆர்வலர்களுக்கான இந்த மாதாந்திர ஊக்கத்தொகைத் திட்டமானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்படும். கடந்த சில ஆண்டுகளாக, ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறும் தமிழ்நாட்டு மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துவருவதைக் கருத்தில் கொண்டு அகில இந்திய போட்டித் தேர்வுகளில் மீண்டும் தமிழ்நாட்டை முன்னிலைக்குக் கொண்டுவருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு சிறந்த பயிற்சியும் பாடக்குறிப்புகளும் கிடைப்பதை இத்திட்டம் உறுதிசெய்ய முனைந்துள் ளது.

மதிப்பீட்டுத் தேர்வை எழுத ஏதேனும் ஒரு இளங்கலைப் பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். குறைந்தபட்ச வயது 21. பொதுப் பிரிவினருக்கான அதிகபட்ச வயது 32. பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப் பட்ட பிரிவினருக்கும் சீர்மரபினருக்கும் அதிகபட்ச வயது 35, பட்டியல் வகுப்பினருக்கும் பழங்குடியினருக்கும் அதிகபட்ச வயது 37, மாற்றுத்திறனாளிகள் 42 வயதைக் கடந்திருக்கக் கூடாது. ஐ.ஏ.எஸ். தேர்வுக்கான வயது வரம்பின் அடிப்படையில் மதிப்பீட்டுத் தேர்வுக்கான வயது வரம்பு நிர்ண யிக்கப்பட்டுள் ளது.

மதிப்பீட்டுத் தேர்வின் வாயிலாக தேர்வுசெய்யப்பட உள்ள 1,000 மாணவர்களில் 21-22 வயது கொண்ட புதிய ஆர்வலர்கள் 50 பேருக்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் சிறப்பம்சமாகும். பட்டப்படிப்பின் போதே, போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு இந்த வாய்ப்பு மிகப்பெரிய பயனளிக்கும். மருத்துவம், கால் நடை அறிவியல் மற்றும் ஒருங்கிணைந்த பட்டப் படிப்பு மாணவர்களுக்குச் சலுகை அளிக்கப்படும். என்றாலும், அதுகுறித்து திறன் மேம்பாட்டுக் கழகமே முடிவு செய்யும். மதிப்பீட்டுத் தேர்வுக்கு https://nmcep.tndge.org/apply_now என்ற இணையதள முகவரியில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பிக்கக் கடைசி நாள், 17.08.2023.

10.09.2023 அன்று முற்பகல் தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் மதிப்பீட்டுத் தேர்வு நடைபெறவுள்ளது. சரியான விடைகளைத் தேர்வு செய்யும் வகையில் 150 கேள்விகளைக் கொண்டதாக இத்தேர்வு அமையும். 100 கேள்விகள் பொது அறிவு பிரிவிலிருந்தும் 50 கேள்விகள் சிசாட் எனப்படும் குடிமைப் பணித் தேர்வுகளுக்கான திறனறிவு பிரிவிலிருந்தும் கேட்கப்படும். தவறான கேள்விகளுக்கு எதிர்மறை மதிப்பெண்கள் கிடையாது. வினாத்தாள் ஆங்கிலத்தில் மட்டுமே இருக்கும். தேர்வுக்கான கால அளவு, 3 மணி நேரம்.

இத்தேர்வில் முதலிடம் பிடிக்கும் 1,000 மாணவர்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்படும். இட ஒதுக்கீட்டு முறையைப் பின்பற்றி இந்தப் பட்டியல் தயாரிக்கப்படும். இந்த மதிப்பெண் பட்டியலிலிருந்து சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் இயங்கிவரும் அகில இந்திய குடிமைப் பணி பயிற்சித் தேர்வு மையம், கோயம்புத்தூரிலும் மதுரையிலும் இயங்கிவரும் அண்ணா நூற்றாண்டு குடிமைப் பணி பயிற்சி நிலையங்களுக்கும் சேர்க்கை நடைபெறும். சென்னை பயிற்சி மையத்தில் 225 மாணவர்களுக்கு உண்டு உறைவிட வசதியுடன் முழுநேரப் பயிற்சியும் 100 மாணவர்களுக்குப் பகுதிநேரப் பயிற்சியும் அளிக்கப்பட்டுவருகிறது. கோயம்புத்தூர், மதுரை பயிற்சி நிலையங்களில் தலா 100 மாணவர்களுக்கு முழுநேரப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

சென்னை இராஜா அண்ணாமலைபுரத்தில் குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தை நடத்தி வரும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, டி.என்.பி.எஸ்.சி., எஸ்.எஸ்.சி., சீருடைப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கும் உதவும் வகையில் இணையம் வழியாகப் பயிற்சியளித்து வருவது குறிப்பிடத்தக்கது. AIM TN என்ற யூடியூப் தளத்தில் இந்தப் பயிற்சிக் காணொளிகள் பார்க்கக் கிடைக்கின்றன.

இது தவிர வங்கித் துறை, ரயில்வே துறை, எஸ்.எஸ்.சி. உள்ளிட்ட ஒன்றிய அரசின் மற்ற போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு உதவும் வகையில் கட்டணமில்லாப் பயிற்சித் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 5000-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்குக் கட்டணமில்லா பயிற்சி, பாடநூல்கள், வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஐ.ஏ.எஸ். தேர்வுகளுக்கு ஊக்கத்தொகையுடன் பயிற்சி, எஸ்.எஸ்.சி. தேர்வுகளுக்கு இதற்கு முன்பு எப்போதும் இல்லாத வகையில் சிறப்புக் கவனம், ஊரக மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் வல்லுநர்களின் காணொளி வகுப்புகள் என்று போட்டித் தேர்வு ஆர்வலர்களுக்கு ஏற்ற ஒரு சூழலைத் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அரசுப் பணிகளின் வாயிலாக நாடு முழுவதும் தமிழ்நாட்டின் முத்திரை யைப் பதிக்க கல்லூரி மாண வர்கள் தயாராக வேண்டும் என்பதே எதிர்பார்ப்பு.

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலம் பேரூராட்சி, அறிவொளிநகர் பகுதியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், நரிக்குறவர் இன மக்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்களையும், பழங்குடியினர் ஜாதிச் சான்றிதழ்களையும், சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் நேற்று முன்தினம் (05.08.2023) வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜ.சா.மெர்சி ரம்யா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மகேஸ்வரி சண்முகநாதன், கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் கே.சி.சிவக்குமார், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெறவுள்ள இடத்தையும், அங்கு நடைபெற்று வரும் மேடை அமைக்கும் பணியையும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், ஐ.பெரியசாமி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ஆய்வு செய்தனர். கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, மாவட்டச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ., மற்றும் கழக முன்னோடிகள் அப்போது உடனிருந்தனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில்

மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கும் பணி!

நிதி – மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் ஆய்வு!

தஞ்சாவூர் ஆக.7-

தஞ்சாவூர் மாவட்டத்தில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைத்தல் பணி தொடர்பான பணிகளை நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கையின் போது உலகாண்ட சோழர்களின் பங்களிப்பை போற்றவும் அக்கால கலைப் பொருட்கள் நினைவுச் சின்னங்களை பாதுகாக்கவும் தஞ்சாவூரில் மாபெரும் சோழர் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகம் அமைப்பதற்காக தஞ்சாவூர் பெரியகோயில் அருகேயுள்ள மேம்பாலம் அருகில் உள்ள இடத்தை மாவட்ட ஆட்சியர் ஏற்கெனவே தேர்வு செய்து, துறைச் செயலர் உள்ளிட்ட அலுவலர்களிடம் காண்பித்துள்ளார். இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது என துறைச் செயலர் கூறியதன் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டது.

தஞ்சாவூர் மாநகரில் இவ்வளவு பெரிய இடம் கிடைத்திருப்பது அரிய வாய்ப்பாக இருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் எண்ணம் வீண் போகாத வகையில் சிறந்த அருங்காட்சியகத்துக்கு இந்த இடம் ஏற்புடையதாக உள்ளது.

தஞ்சாவூரில் சோழர்களின் பெருமையை பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்க முதல்வர் உத்தரவிட்டார். இந்திய வரலாற்றில் சோழர்களின் காலம் மிகப்பெரியதாக்கத்தை ஏற்படுத்தியது. கடல் கடந்த வாணிபமும், போர்வெற்றியும் அவர்களின் ஆட்சிமுறையும் இந்தியாவில் இருந்த எத்தனையோ அரசாட்சிகள் நடந்திருந்தாலும், முதன்மையாக சோழர்களின் காலம் விளங்கியது. தஞ்சாவூர் பெரிய கோவில் கட்டிய மாமன்னன் இராசராச சோழன், கங்கைகொண்ட சோழபுரம் கட்டிய ராஜேந்திர சோழன் என பிற்காலச் சோழர்களின் பங்களிப்பு தமிழகத்தில் நிலை நாட்டிய பெருமை உண்டு. சோழர்களின் போர் வெற்றி,

கோவில் பணிகள்,சமுதாயப் பணிகள்,கலைத்திறன் என எல்லாவற்றையும் விளக்கக் கூடிய வகையில் அருங்காட்சியகம் அமைய உள்ளது.ஏற்கனவே 1000 ஆண்டு விழாவின்போது சோழர்களின் பெருமையை விளக்கும் விதமாக மிகப் பெரிய கண்காட்சி நடத்தப்பட்டது.

அது ஒரு குறிப்பிட்ட காலம் தான் நடைபெற்றது. தற்போது நிரந்தரமாக இந்த அருங்காட்சியகம் தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைய உள்ளது. தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள இடம் பெரிய கோவில் அருகே அமைந்துள்ளதால் மிகவும் சிறப்பாக உள்ளது. பெரிய கோவிலுக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு எளிதாக அருங்காட்சியத்திற்கு வந்து பார்ப்பதற்கு சிறந்த இடமாக அமைந்துள்ளது. விரைவில் முதல்வரின் ஒப்புதலின் பேரில் கட்டுமான பணிகள் துவங்கப்படும். என்றும் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை

அமைச்சர் தங்கம். தென்னரசு தெரிவித்தார்.

ஆய்வின் போது தமிழ் நாடு சுற்றுலா பன்பாடு (ம) அறநிலையத்துறை அரசு முதன்மை செயலர் முனைவர். க.மணிவாசன், அருங்காட்சியக ஆணையர் (மு.கூ.பொ) மா.அரவிந்த், முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே. ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண். ராமநாதன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர். உஷா புண்ணியமூர்த்தி, தஞ்சாவூர் மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி, தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார், மாவட்ட சுற்றுலா அலுவலர் கே.நெல்சன், தஞ்சாவூர் அரசு அருங்காட்சியம் காப்பாட்சியர், சி.சிவகுமார் (பொ) மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

இந்திய ரயில்வேயில்

கடுமையான பணியாளர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது!

மக்களவையில் கனிமொழி கருணாநிதியின் கேள்விக்கு - ஒன்றிய அமைச்சர் பதிலில் ஒப்புதல்!

புதுடெல்லி, ஆக.7-

ஒன்றிய ரயில்வே அமைச்சருக்கு தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், மக்களவை தி.மு.க. துணைத் தலைவருமான கனிமொழி எம்பி, மற்றும் எம்.செல்வராஜ், கௌசலேந்திர குமார், நடராஜன், ஹிபி ஈடன் ஆகிய எம்.பி.க்கள் எழுத்துப்பூர்வமாக கேள்விகளை எழுப்பியிருந்தனர்.

"இந்திய ரயில்வேயில் நிலவும் கடுமையான பணியாளர் பற்றாக்குறை பற்றி ரயில்வே நிர்வாகம் அறிந்திருக்கிறதா?

ரயில்வேயின் 18 மண்டலங்களிலும் பல்வேறு கெசட்டடு ஆபீசர்ஸ் மற்றும் 3.12 லட்சத்துக்கும் மேற்பட்ட நான் கெசட்டடு பணியிடங்கள் காலியாக இருக்கிறது. ஒவ்வொரு மண்டலம், கோட்டம் வாரியாக காலி பணியிடங்களின் எண்ணிக்கை என்ன?

இந்த காலிப் பணியிடங்களை நிரப்ப ரயில்வே நிர்வாகம் ஏதும் நடவடிக்கைகள் எடுத்திருக்கிறதா? காலி பணியிடங்களை நிரப்புவதற்கு ரயில்வே நிர்வாகம் ஏதும் கால வரம்பு நிர்ணயித்திருக்கிறதா? ஆட்சேர்ப்பு செயல்முறையை விரைவுபடுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்;

16 மணி நேர வேலை!

பணியிடங்களை நிரப்பாததால் தற்போது பணியில் இருக்கும் ஊழியர்கள் ஓய்வு இல்லாமல், உணவும் உட்கொள்ளாமல் 16 மணி நேரம் வரை பணி செய்யும் கட்டாயத்துக்கு தள்ளப்படுகிறார்களா? இதன் உண்மை விவரங்கள் என்ன?

ரயில்வே துறையில் ஒப்பந்தப் பணியாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டு, மண்டலம், கோட்டம் வாரியாக என்ன?

ஒப்பந்தப் பணியாளர்களோடு ஒப்பிடும்போது நிரந்தர பணியாளர்கள் அதிக பொறுப்புடையவர்கள் ஆகிறார்களா? இந்த ஒப்பீடு ரயில்வேதுறையின் செயல் திறனை பாதிக்கிறதா? இதன் விவரங்கள் என்ன?" என்ற கேள்விகளை எழுத்துப்பூர்வமாக கேட்டிருந்தார்கள்.

அமைச்சர் பதில்!

இந்தக் கேள்விகளுக்கு பதிலளித்துள்ள ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், இந்திய ரயில்வேயில் மண்டல வாரியாக நிலவும் பணியாளர் பற்றாக்குறை எண்ணிக்கை பற்றி பட்டியல் சமர்ப்பித்துள்ளார். அது வருமாறு:

அதன்படி இந்திய ரயில்வேயில் அனைத்து மண்டலங்களையும் சேர்த்து கெசட்டடு ஆபீசர்ஸ் பணியிடங்கள் 2,680 காலியாக இருக்கின்றன. நான் கெசட்டடு பணியாளர்கள் பணியிடங்கள் 2 லட்சத்து 61 ஆயிரத்து 233 காலியாக உள்ளது.

குறிப்பாக தென்னக ரயில்வேயில் 120 கெசட்டடு ஆபீசர்ஸ் பணியிடங்களும், 15 ஆயிரத்து 240 நான் கெசட்டடு பணியிடங்களும் காலியாக இருக்கின்றன.

இவை தவிர ரயில்வேயின் பாதுகாப்பு செயல்பாட்டுத் துறையில் 53 ஆயிரத்து 178 இடங்கள் காலியாக இருக்கின்றன.

உலகின் மிகப்பெரிய நிறுவனமான இந்திய ரயில்வேயில் காலியிடங்கள் ஏற்படுவதும் அதை நிரப்புவதும் தொடர் நடவடிக்கையாக உள்ளன. குறிப்பாக செயல்பாட்டுத் தேவைகளுக்கு முன்னுரிமை அளித்து காலியிடங்கள் நிரப்பப்படு கின்றன. ரயில்வே வேலை வாய்ப்பு முகமைகள் மூலம் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

ரயில்வேயில் குரூப் 'ஏ' சேவைகளுக்கு நேரடி ஆட்சேர்ப்பு ஒன்றிய பொதுப் பணியாளர் தேர்வாணையத்தால் (UPSC) செய்யப்படுகிறது.

அண்மையில் இந்திய ரயில்வேக்கான மிகப்பெரிய ஆட்சேர்ப்புப் பயிற்சி நிறைவடைந்துள்ளது. 2.37 கோடி விண்ணப்பதாரர்களில் இருந்து கணினி அடிப்படையிலான தேர்வு மூலம் 1,39,050 பேர் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

தொழில்நுட்பம் அல்லாத பிரிவுகளுக்கான பணியிடங்களுக்காக மையப்படுத்தப்பட்ட வேலை வாய்ப்பு அறிவிக்கை 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு, அதன்படி கணினி வழியிலான தேர்வு 1.26 கோடி பேர்களுக்கு நடத்தப்பட்டது. இத்தேர்வு நாட்டின் 211 நகரங்களில் 726 மையங்களில் 15 மொழிகளில் நடைபெற்றது.

மேலும் ரயில்வே தேர்வுக் கழகம் மூலமாக லெவல் 1 பிரிவுக்கான கணினி வழித் தேர்வு 1.11 கோடி விண்ணப்பதாரர்களுக்கு நாடு முழுதும் 191 நகரங்களில் 551 மையங்களில் 15 மொழிகளில் நடத்தப்பட்டது.

2022 ஏப்ரல் 1 முதல் 2023 ஜூன் 30 வரை 'சி' பிரிவு பணியிடங்களுக்கு ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 773 விண்ணப்பதாரர்கள் 'சி' பிரிவு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில் ஒரு லட்சத்து 11 ஆயிரத்து 728 பேர் பாதுகாப்புப் பிரிவு பணிக்கானவர்கள்.

எர்ணாகுளத்தில் அமைந்துள்ள திருவனந்தபுரம் கோட்டம் உள்ளிட்ட தென்னக ரயில்வேயில் காலி பணியிடங்களை நிரப்புவதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

3361 பேர் தென்னக ரயில்வேயில் சி பிரிவு பணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.8514 பேர் லெவல் 1 பணிக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு ரயில்வேயில் ஏற்படும் காலி பணியிடங்கள் நேரடி நியமனம் மூலமாகவோ, பதவி உயர்வு மூலமாகவோ தொடர்ந்து நிரப்பப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் காலி பணியிடங்களால் மற்ற பணியாளர்கள் 16 மணி நேரம் உணவு, ஓய்வின்றி பணி செய்கிறார்கள் என்ற தகவல் அரசுக்கு இதுவரை வரவில்லை.

2022 ஆம் ஆண்டு அனைத்து மண்டலங்களையும் சேர்த்து 8 ஆயிரத்து 362 பேர் ஒப்பந்தப் பணியாளர்களாக இருக்கிறார்கள்.

இந்திய ரயில்வேயில் நிரந்தர ஊழியர்கள் மூலமும், ஒப்பந்த ஊழியர்கள் மூலமும் பணிகள் நடைபெற்று வருகின்றன. முக்கியத்துவம் மிகுந்த பணிகளில் ஒப்பந்த பணியாளர்கள் அமர்த்தப்படுவதில்லை. மேலும் இவர்களை கண்காணிக்க மேற்பார்வையாளர்களும் இருக்கிறார்கள்" என்று ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.